மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.42/2015

2024-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் (Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.29.01.2024</u>
<u>வா.சா.1</u>
<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் 2ம் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 27.12.2013-ம் தேதியில் இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு பட்டா வேண்டி அனுப்பப்பட்ட மனு கை நகல் (அதில் receipt மற்றும் அஞ்சல ரசீதுகள் இல்லை ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.1 ஆகும்.
2. 23.03.2020-ம் தேதியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியருக்கு பட்டா வேண்டி அனுப்பப்பட்ட மனு கை நகல் (அதில் receipt மற்றும் அஞ்சல ரசீதுகள் இல்லை ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.2 ஆகும்.
3. 12.08.2015 ம் தேதியில் இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு பட்டா வேண்டி அனுப்பப்பட்ட மனு கை நகல் வா.சா.ஆ.3 ஆகும்.
4. 17.09.2018-ம் தேதியில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியருக்கு பட்டா வேண்டி அனுப்பப்பட்ட மனு கை நகல் வா.சா.ஆ.4 ஆகும்.
5. 23.06.2015-ம் தேதியில் இராமநாதபுரம் காவல் துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பட்ட புகார் மனு கை நகல் (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.5 ஆகும்.
6. சொத்து வரி ரசீதுகள் அசல் (எண்ணம்-11) வா.சா.ஆ.6 ஆகும்.

7.15.06.1994-ம் தேதியில் எனது பெயரில் வழங்கப்பட்ட இன்சுயூரன்ஸ் பாலிசி ரசீது வா.சா.ஆ.7 ஆகும்.

8. மண்டபம் மீன்வள துறையினரால் கருப்பையாவிற்கு வழ்ங்கப்பட்ட மீனவர் உறுப்பினர் அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆகும்.

9. 17.07.2019-ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கை நகல் (வழக்கறிஞர் கையொப்பம் இல்லை, அஞ்சலக ரசீது இல்லை, ஒப்புகை அட்டை இல்லை ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.9 ஆகும்.

10.17.07.2019-ம் தேதியில் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட புகார் மனு கை நகல் வா.சா.ஆ.10 ஆகும்.

11.18.07.2015-ம் தேதியில் கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கு வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகும்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்